செய்தி வெளியீடு எண் :09 நாள் :11.03..2018

## *தேனி மாவட்டம்,*
## *மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ்.,இ.ஆ.ப. அவர்கள் இரண்டாம் தவணை போலியோ சொட்டுமருந்து வழங்கும் முகாமினை துவக்கி வைத்தார்:-*

*********

தேனி மாவட்டம், தேனி நகர்புற அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில், இரண்டாம் தவணை போலியோ சொட்டு மருந்து முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ் இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் இன்று (11.03.2018) குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்தினை வழங்கி துவக்கி வைத்தார்.

முகாமினை துவக்கி வைத்து மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவிக்கையில், மாவட்டத்தில் போலியோ சொட்டு மருந்து முகாம் கடந்த 28.01.2018 ஞாயிற்றுக்கிழமை முதல் தவணையாக வழங்கப்பட்டது அதனைத்தொடந்து இன்று 11.03.2018 ஞாயிற்றுக்கிழமை இரண்டாவது தவணையாக வழங்கப்படுகிறது. 786 போலியோ சொட்டு மருந்து முகாம்கள் அமைக்கப்பட்டு, 3,407 களப்பணியாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டு, ஐந்து வயதிற்குட்பட்ட 1,02,020 குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கப்படவுள்ளது.

அனைத்து அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், சத்துணவு மையங்கள், தேனி அரசு மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனை, துணை சுகாதார நிலையங்கள், பள்ளிகள், பேருந்து நிலையங்கள், சந்தைகள், திருவிழாக்கள் நடைபெறும் 786 இடங்களில் காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெறவுள்ளது. மேலும், மாவட்டத்தில் மலை பகுதிகளில் எளிதில் செல்ல இயலாத பகுதிகள், குடிசைப்பகுதிகள் என கண்டறியப்பட்ட இடங்களுக்கு 26 நடமாடும் குழுக்கள் மற்றும் 30 டிரான்ஸிட் குழுக்கள் மூலம் போலியோ சொட்டு மருந்து குழந்தைகளுக்கு வழங்கிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் சுகாதாரப் பணியாளர்களைக் கொண்டு விடுபடும் குழந்தைகளின் வீடுகளுக்கே சென்று அடுத்த 3 நாட்களுக்குள் போலியோ சொட்டுமருந்து வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. முதல் தவணையாக போலியோ சொட்டுமருந்து வழங்கப்பட்ட குழந்தைகளுக்கும் இரண்டாம் தவணை போலியோசொட்டுமருந்து வழங்கலாம். எனவே, பொது மக்கள் தங்களுடைய ஐந்து வயதிற்குட்பட்ட போலியோ சொட்டு மருந்து முகாம்களுக்கு அழைத்துச் சென்று போலியோ சொட்டு மருந்தினை கொடுத்து போலியோ நோய் இல்லாத சமுதாயத்தை உருவாக்கிட அனைவரும் முன்வர வேண்டும் என மாவட்ட ஆட்சிதலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ்., இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இம்முகாமில் உடன் துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.சண்முகசுந்தரம் அவர்கள், தேனி-அல்லிநகரம் நகராட்சி ஆணையர் திரு ராஜாராம், மாவட்ட தாய் சேய் நல அலுவலர் திருமதி.செல்வி, வட்டார மருத்துவ அலுவலர் மரு. மணிகண்டன், மாவட்ட பூச்சியல் வல்லுனர் திரு.தெய்வேந்திரன், மருத்துவ அலுவலர் மரு.சுகன்யா உட்பட பலர் உள்ளனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தேனி.**